அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 179

எனது இல. ஏ/11.
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,
இல. 28/10, லோங்டன் பிளேஸ்,
கொழும்பு – 7.
1980, செத்தெம்பர் மாதம் 10ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
நியதிச்சட்டயாக்கங்களின் தலைவர்கள் யாவர்க்கும்,

அரசாங்க நிருவாகம், முகாமைத்துவம் என்பன தொடர்பான அந்நியநாட்டுப் புலமைப்பரிசில்களும் ஆய்வரங்குகளும் கடல் கடந்த நாடுகளுக்கான விஜயங்களும்.

அரசாங்க நிருவாகம், முகாமைத்துவம் என்பன சார்ந்த வெவ்வேறு துறைகளில் பயிற்சியளித்தற்கான அந்நியநாட்டு உதவியால் மிகச் சிறந்த பயன் விளையச் செய்யும் வண்ணம் அவ்வுதவியில் கட்டுக்கோப்பு இடம்பெறுவதை உறுதி செய்வதற்காக (அ) இந்தத் துறைகளிலடங்கும் அந்நியநாட்டுப் புலமைப் பரிசில்கள், ஆய்வரங்குகள், கடல்கடந்த நாடுகளுக்கான விஜயங்கள் என்பனவற்றை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளும் பேரவை கையாள வேண்டுமென்றும், (ஆ) இது தொடர்பான பேரவையின் பணிகளை அரசாங்க நிருவாக அமைச்சு கூட்டிணைப்பு செய்ய வேண்டுமென்றும், (இ) வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் பயிற்சி பெற்ற இலங்கை நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களைப் பயன்தரும் முறையில் பயன்படுத்தும் பொறுப்பும் குறித்த பேரவையிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்தீர்மானங்களை செயற்படுத்தும் பொருட்டு அரசாங்க நிருவாகம், முகாமைத்துவம் என்பன சார்ந்த வெவ்வேறு துறைகளில் அந்நியநாட்டுப் புலமைப் பரிசில்கள், ஆய்வரங்குகள், வெளிநாட்டு விஜயங்கள் என்பனவற்றிற்காக உங்கள் அமைச்சில் நேரடியாகக் கிடைக்கப்பெறும் விருப்பறிவுப்புக்கள் யாவற்றையும் அவை கிடைத்தவுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குக.

உங்கள் அமைச்சைச் சேர்ந்தவர்களும் வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ பயிற்சிபெற்றவர்களுமான இலங்கை நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை, அவர்கள் பெற்ற பயிற்சி பற்றிய விபரங்களுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குக.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஜ. பீ. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.